முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 839

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.01.2022, சனிக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகளை உருவாக்க அவதாரம் கொண்ட
ஞானதேசிகனே என் மகா சூட்சமமே
ஞானபண்டிதன் யானும் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி தன்னை
2. தன்னையே பிலவ கலைத் திங்களில் உரைப்பேன்
(பிலவ வருடம் தை மாதம் 2ம் நாள், 15.01.2022 சனிக்கிழமை)
தவசி உன் சக்திகொண்டு உலகுக்கு
அவனியில் பாதுகாப்பு வேலி இட்டுள்ளேன்
அறமென போர்வை போர்த்தியே
3. போர்த்தியே உலக மக்களை அனுகி
ஆறுமுகன் யான் ஆபத்தின்றி காப்பேன்
பெருமைபட உன் நாமஜெபத்தைச் சொல்லி
பேருலகில் எங்கு தர்மம் நடக்கின்றதோ
4. நடக்கின்ற எல்லையில் பேரிடரோ
நச்சுக்கிருமி வழித்துன்பங்களோ
இடர்கள் ஏதும் பற்றாத வண்ணம் பாதுகாப்புத் தந்து
ஏழாம்படை வீட்டின் தர்ம சக்தி பெருந்துணையாக இருக்கக்கூடும்
5. கூடவே இந்த அற்புதத்தை குறைவின்றி
ஆறுமுகன் யான் உன் வழி நடத்திக்கொண்டு
நாடெங்கிலும் சுத்த சன்மார்க்க நெறியெனும்
நன்மைதரக்கூடிய உயிர் கொலை நீக்கும் உயர்வான நெறியை விதைத்துவர
6. வருகின்ற அரங்கன் தொண்டர் படைகள் மூலமாகவே
வையகத்தை மாற்றி காப்பேன்
தருகின்ற அரங்கன் வழி சக்திகளெல்லாம்
தரணியில் தொண்டர்கள் மூலம் உலகமெங்கும் பரவி
7. பரவியே தர்மமாக சன்மார்க்கமாக
பழுதில்லாத நாமஜெப சரவணச்சுடரின் ஒளிமூலமாக எல்லா திக்கும் பரவி
பரவியே இந்த பேருலகம்
பாதுகாப்பும் சர்வபலமும் காணும்

8. காணவே ஞானவான்கள் தலைமை கூடியும்
கலியுகம் தன் துன்பங்களை இழந்து ஞானயுகமாற்றமாக
மக்களுக்கு பாதுகாப்பு அமைதியும் தரும்
மகத்துவமிக்க யுககாலமாக மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–